
தீவகத்து
உண்மைகள்
சு. முரளிதரன்

# தீவகத்து ஊமைகள்

சு. முரளிதரன்

மலையக வெளியீட்டகம்
த. பெ. 32.
கண்டி.

# பதிப்புரை

கவிஞனின் குரல்
காலத்தின் குரலாகும் - அதனால்
கவிஞன் முரளிதரனின் கவிதைகள்
வரலாற்றின் தேவையாக பதிவு செய்யப்படுகின்றன

மனித நேயமும் மானுட பண்புகளும் கொண்ட
கவிஞர் மலையகத்தின் பெருந்தோட்டத் துறையில்
உழைப்பிற்கே தம்மை அர்பணித்த மக்களின் மீது
தோழமை மிகுந்த அன்பு கொண்டவர்.

இதனை தீவகத்து ஊமைகள் என்ற கவிதை தொகுதி
மூலம் வெளிப்படுத்தியிருக்கிறார்.
இந்த தொகுதியில் இடம் பெற்ற கவிதைகள்
அலை கடலுக்கு அப்பாலும்.....
புலம் பெயர்ந்த நம்மவர்கள்
வெளியிடும் இதழ்களிலும் மறு பிரசுரம் பெற்றவைகள்.

இந்த கவிதைகளை நூலாக்க வேண்டும் என்ற அவா
நீண்ட காலம் நெஞ்சில் கனல் மணக்கும் பூக்களாக
புஷ்பித்திருந்தது. ஆனால் இப்போது தான் செயல் வடிவம்
பெறுகின்றது.

மலையக வெளியீட்டகத்தின் இருபதாவது வெளியீடாக
இந்நூல் வெளிவருகிறது. இன்னும் பல படைப்புக்களை
வெளியிட வேண்டும் என்கிற தாகம்
இன்னும் தீர்ந்து விடவில்லை.

அந்தனி ஜீவா
மலையக வெளியீட்டகம்,
த. பெ. 32,
கண்டி.

# முன்னுரை

நாற்பதுகளில் தொடங்கிய போராட்ட அலை மலையகத்தில் இன்றும் ஓயவில்லை. கி.பி. இரண்டாயிரத்திலும் அதற்கு பின்னும் அது ஓயப் போவதில்லை. ஆகவே அப்போரட்ட உணர்வுகளின் கூர்மை மழுங்கடிக்கப்படாமல் போற்றி வளர்க்கப் படவேண்டும் அதனால் தான்,

‘அன்று இந்தப் பராரிகளுக்கு எதிராகத்
தூக்கப்பட்ட துப்பாக்கிகள் இன்னும் கீழே வைக்கப்பட
வில்லை’

என்கிறார் கவிஞர்.

தியாக வேள்வியில் தங்களை ஆகுதியாக்கிய ஜீவ வைரங்கள் வரலாற்றை மூன்று நிலைகளாகப் பகுக்கலாம்.

1. தொழிற்சங்கப் பாதை அமைக்கப் போரடியவர்கள்
2. எதிர்ப்புரட்சியாளரின் முகத்திரையை கீழ்த்தெறியப் போரடியவர்கள்.
3. மொழி உரிமைக் காக்கும் போரில் உயிர்ப்பலியானோர்கள்

சாமிமலைச் சாரலில் தொடங்கிய வேப்பந்தூரல்கள் சிவனொளி பாதமலையில் முளைவிட்டு டயகமவில் தழைத்தெழுந்து நல்ல தண்ணியில் அரும்பு விட்டு அக்கினியில் பூப்பூத்து மணம் பரப்புகிறது.

கருவாட்டில் நெளியும் பூச்சிகளுக்கு இந்நறுமனத்தைத் தாங்க முடியுமா? முடியவே முடியாது! ‘தலையாட்டும்’ பொம்மைச் சங்கமும், எடுப்பார் கைப்பிள்ளைச் சங்கமும் தோற்றுவித்து போர்முகத்தில் அடலேறுகளைக் கொன்று குவித்தார்! குவிக்கின்றார்! நயவஞ்சகப் பாம்புகளை, பசுந்தோல் போர்த்திய புலிகளை கோமாளிக் குள்ளநரிகளை, அடையாளங் கண்டு கொண்ட தொழிலாளி வர்க்கம்

தொடர்ந்து போரடி வருகிறது. இடையிலே சில பசப்பு வார்த்தைகள், அதிலே சொக்கிய சிலபேர்களுக்கு மயக்கம் இருந்த போதிலும் தொழிலாளிவர்க்கம் மீண்டும் தன்னுணர்வு பெற்று நடைபோடும் என்ற நம்பிக்கையின் வெளிப்பாடே இக்கவிதைகள். லெட்சுமணனைத் தேர்தல் திருவிழாவின் போது துண்டு துண்டாக்கி தோளில் சுமந்து கூவிக்கூவி தோட்டத் தோட்டமாய் விற்ற போது அதை வாங்கித்தின்று வாக்களித்த பாவத்திற்கான தண்டனை இன்னமும் முடியவில்லை என்ற வரிகளும், தியாகத்திற்கே அச்சரங்களாக, செத்துபோன இவர்களைக் கொண்டு - இனி மாவட்ட சபைப் போர்வையில் மண்கட்டிகளை பொன்கட்டிகளாக்கும் இரசவாதம் புரியப்போகிறார்கள்!

எச்சரிக்கை! நண்பர்களே! எச்சரிக்கை
என்ற வரிகளும் என் நெஞ்சில் பதிந்தவையாம்.

கவிஞரான முரளிதரனிடம் ஆழமான பார்வையும, அறிவார்ந்த கலைத்திறனும் உள்ளன. இனி வரும் காலத்தில் அவர் நிறைய படித்து நிறைய எழுதவேண்டும்.

பேராசிரியர். செ. போத்திரெட்டி
தமிழியல் துறை,
அமெரிக்கன் கல்லூரி,
மதுரை, தமிழ் நாடு,
இந்தியா.

# சமர்ப்பணம்



மனித நேயமிக்க
ஜோசப் ஜேஸ்கொடி
அவர்களின்
நினைவுகளுக்கு.........

## திரும்பிப் பார்க்க வேண்டிய தியாகங்கள்

நேற்றைக்கு முந்தையவர்களுக்கு
இவர்கள் தேவையில்லை தான்
ஆனால்,
இன்றைய எம்மவர்களோடு
இவர்களின்
துடிப்புகளின் ஆத்மார்த்தம்
புனிதங் கெடாமல்
நாளைய நம்பவர்களுக்கு
கைமாற்றப்பட வேண்டிய
நிர்ப்பந்தம் இருக்கின்றது !

நிர்வாண பாதங்களோடு
முட்புதரைக் கடந்து
நெருப்பை ஊதியணைக்க
முயன்ற இவர்களை
முற்றும் துறந்த புத்தர்களாக
தரிசிக்க வேண்டியதில்லை
ஆனால்,
கணப்பொழுதில்
ஞானம் பெற்று
மெழுகுப்படலத்தில்
தணலெழுதிய கவிதைகள்
தேவையில்லையென
கந்தகப்பூச்சினில்
தீக்குச்சியால் காவியம்
யாக்க காப்புக்கட்டி
ஜீவியம் விட்டும்
இன்றும் வாழ்ந்து
மறுபடியும் மறுபடியும்
பிறக்கக் கூடிய அவதார புருஷ லட்ஷணம்
கொண்டவர்கள் !

திரும்பித்தான் பார்க்க வேண்டும்
இந்தத் தீக்குஞ்சுகளை
இல்லாவிட்டால்
நாளைய நம் அணில்குட்டிகள்
இன்றுப் போன நமது
சவப்பெட்டிகளைக் கூட
மன்னிக்க மறுத்து
கழுவிலேற்றி விடும்!

தேயிலைக் காட்டுக்குள்
படர்ந்து அடர்ந்த
வறுமைப்புதர்களுக்குள்
திருட்டு நாகம் தான்
நர்த்தனமிடும்
என்றிருந்தவர்களுக்கு
தியாகத்தின் அரிச்சுவடியை
புகட்டியவர்களை
திரும்பிப் பார்க்கத்தான்
வேண்டும்!

முள்ளோயா - உருளவள்ளி
நாளந்த - கீனாக் கொல்லை
டெவன்...........
நண்பர்களே - முடியவில்லை
பட்டியல், இப்போது தான்
தொடங்கியுள்ளது!

கோவிந்தன் - லெட்சுமணன்
மார்க்கண்டேயர்களில்லை!
புதிய
மார்க்கம் கண்டவர்கள்
ஆனால் - இந்தத்
தியாகத் தங்கங்களுக்கு
தயவு செய்து

இனவாதமுலாம் பூசி
பிரகாசத்தை நம்
எல்லைக்குள் முடக்க வேண்டாம்!
இவைகள்
உலக வெளியில்
அடக்கு முறை வெடிப்பின்
குறியீடுகளாய்
அதிகார ஆணவத்து
சிம்ம சொப்பனங்களாய்
விளங்கிட
மானுடத்திடம்
ஒப்படைப்போம் !

கொழுந்து
ஜனவரி 1998

## பிரியத்தான் வேண்டுமா உரிய பூமியை

பிட்டந்தேய்ந்த
பெரிய களிசான்களை
உழுத்த கூடைக்கயிற்றால்
உருவாஞ் சுருக்கிட்டு,
ஊழ மூக்கோடு
கவ்வாத்துக் காட்டில்
கரட்டான் அடித்துக்
கொண்டிருந்த போது
யாரே இருவர்
அப்பாக்களுக்காய்
ஆடை நெய்தனர்!

உழைப்பை
உறிஞ்சி உறிஞ்சி
உருண்ட காலமடியில்
ஆடைகளை போர்த்தாமலே
அப்பாக்கள்
பாடையிலே
போய்விட்டார்கள்.

ஆடையோ
நனைந்தது - உலர்ந்தது
நைந்தது - இழிந்தது!
அது இருக்கிறது -
என்பதை மட்டும்
அடிக்கடி
சொல்லிச் சொல்லியே
ஒரு தலைமுறை
இடைவெளி நகர்ந்து
போனது!

மலைகளுக்கே
பாரமாக இல்லாதபோது,
மந்திரிகளுக்கு மட்டும்
என்னவோ
சுமையானதால்
அந்த கந்தலாடையை
எடுத்து மீண்டும்
மைந்தர்களிடையே
வருதல்.............
ஒரு பூகம்பத்துக்கு
தூண்டில்
வீசப்படுகின்றது!

வரும் போதிருந்த
வறுமையயை மட்டும்
ஒன்றரை நூற்றாண்டு
உடமையாகக் கொண்ட
தேசத்துக்கு தேயிலையையும்
தேயிலைக்கு நாமுமென
ஆகிப்பேனா பந்தத்துக்கு
காகித ஒப்பந்த
நிர்ப்பந்தம் ஏன்?

இங்கே
மண்குவியல்களாக
மலைகள்? - அவை
தேச
அன்னையின் முலைகள்
பால் சுரக்கச் செய்தன
இந்தக் கரங்கள்!

மூன்றுக்கு மேலான
தலைமுறைகள்
விட்ட மூச்சு

சுவாசமில்லை
விசுவாசம்!

விழுதுகள் விட்டப்பின்
விதைகள்
தேடு வீரே

காதலிகளுக்கு கல்லறை
கட்டவா ? - காலடி
வைக்க மட்டுமே
மண்ணில்
இடங் கேட்டோம்!

பிரிய பூமி என்பதில்
பிரச்சினை தான்!
ஆனால்
உரிய பூமி என்பதற்கு
உறுதி இருக்கின்றது!

மலைகளே
தேயிலை மரங்களே
நீங்கள் சொன்னால்
போதும்
பிரியத்தான் வேண்டுமா
உரிய பூமியை?

மண்டபம் 'கேம்ப்'புக்கு
போய்த் தான்
மண்டையை பொட
வேண்டுமென்பதில்லை

ஒப்பந்தமுள்முடி
சூடியே ஆகவேண்டுமென
ஓட்டாரம்

பிடித்தால்
வாருங்கள் தோழர்களே
அன்னைக் கர்ப்பத்தில்
மீண்டும் புகுந்து கொள்வோம்!
அப்பாக்கள் இளமையாகியப் பதில்
சொல்லட்டும்!

தேசப்பரப்புக்களுக்கிடையில்
இந்தியா - இலங்கை
இவர்களை உதைத்து
கோல் போட்டுப் கொள்ளலாம்
ஆனால் - இன்றும்
உலக மைந்தர்களை
எல்லைக் கோடு பிரித்து
ஏற்றி இறக்குவதாயின் -
யார் சொன்னது
நிலவினிலே கால்வைத்தவன்
மனிதனென்று -
வைத்தவன் அமெரிக்கன்!



குன்றின்குரல்
மே - ஜூன் 1990

# கையெழுத்தே தலையெழுத்தாகி

கம்ப்யூட்டரில்
மூன்று வயது குழந்தை
ஏடு தொடங்கி
பத்து வயதில்
பட்டம் பெறும்.

சட்லைட்டில்
அமர்ந்தபடி
மேற்குலக வாண்டுகள்
பூமி சாஸ்திரம்
படிக்கும்.

ஏவு கணைகள்
மிஞ்சி எரிச்சலில்
சூரியனுக்கு
வியர்த்து கொட்டும்.

மனிதபாரம்
தாங்காமல்
நிலா இறங்கி
தரை முட்டும்.

விலங்குகளைக் கூடி
உலகப் பிரச்சினைகள்
குறித்து
மகா நாடு போடும்.

மலைப் பயல்களுக்கு
மட்டும்
கையெழுத்துப்
போடக் கற்றுக் கொள்ள
ஐந்து வருடங்களாகும்.
தலையெழுத்து!

குன்றின் குரல்
செப்டெம்பர் 1992

## வைர இருதயத்து கறுப்பு இமயம்

தவிக்கு நேத்திரங்கள்
உன் வரவை பார்திருக்க
நீயோ
சிறைக்கதவினை பார்த்தப்படியே
இன்றுவரை!

ஒன்பதினாயிரத்து ஐந்நூற்றுச்சொச்ச
நீண்ட....... நீண்ட..........
இரவுகளையும் பகல்களையுங்
கடத்திவிட்டாய் - என
நான் கணக்குப் போட்டாலும்
கறுப்பு இமயமே
ரொபின் தீவு நாலடிச் சிறையுள்
நடை பயிலும் உந்தன்
உள்ள வெளியில் தினம்
இரண்டரை கொடி கறுப்பர்களின்
விடுதலை அணிவகுப்பு

விஞ்ஞானிகளே
வைரம் தான் வன்மையென
எத்தனை தடவை வேண்டுமானலும்
சொல்லிக் கொள்ளுங்கள்

அது தான் விடுதலைக்காய்
இனவிடுதலையை பலியிடாமல்
இருப்பதாறு வருடங்களாக
இறுகிப்போன
இந்தகறுப்பு இமயத்தின்
நிழல் பட்டு நொறுங்குவதை
காணும் வரை -
வைரம் தான் வன்மையென

எத்தனை நாள் வேண்டுமானலும்
சொல்லிக்கொள்ளுங்கள்.

போர்த்தாக்கங்களைப் பார்த்துவிட்டு
உலகமே மௌனமாக
இருப்பது - எனக்கு
அது விடுதலைகளின்
மொத்த சமாதியாகத்தான்
தெரிகின்றது.
மண்டலாவே
நீ வெளியில் வராமலேயே
போகலாம். - ஆனால்
இத்தனை வருட - காலவுன்
விடுதலை வெறிகொண்ட
சிறைச்சுவாசம்
இருக்கின்றதே அது
காற்றினை ஊடுருவியிருப்பது
கண்ணுக்கு தெரியவா
போகின்றது.

கொழுந்து
ஜனவரி 1989

## உயிர்க்கும் நாட்களும் மரிக்கும் நாட்களும்

மேற்கே நிமிர்ந்த மலைகளின்
முதுகுகள் கோதி
சூரியக் கண்கள் துயின்றிடும்

நிமிஷங்கள் வரைக்கும்
தேயிலைத் தலையினில்
அழுத்திய கரங்களின்
கொய்தல்களில்
கசங்கிய தளிர்களின்
சுகந்தம் -
மாயமாய் போகும்!
அதை
இராத்திரி பொழுதினில்
சீழ்க்கைச் சுவாசம்
வேகமாய் உரிக்கும்!

பாரக் கூடையின் கயிறு
படிந்து தலையில் பதிந்த
தடங்களைத் தேடித் தேடி
வருடும்
சொரத்துப் போன விரல்கள்!

முகத்தின் முகவரி சொல்ல
முன்னே துருத்திய
பற்களின் உரசல்கள்
முத்தமெனப் பொருள்
கொள்ளச் சொல்லும்!

விறைந்த குன்றுகளை
தடவித் தின்ற
விழிகளுக்குக் கீழே

சமவெளியென விரியும் -
அவள் மேனி!

பூப்பதற்கு முதலே
போட்டுச் சுமக்கின்ற
கூடையின் புடைப்பில்
குழிந்த முதுகினில்
புதையும் முகத்தை
விடிந்ததும் மீண்டும்
தொடரும்!
வேதனை நிகழ்வுகள்
குத்தும்!
மின்னற் கணமே ஆகிய
புணர்தல் முடித்து
புரளும் இரண்டு -
ஆடைகள் மூடிய
எலும்புக் குவியல்களின்
சலன உதிர்வு
அந்தகாரத்தே ஆழ்ந்த
மௌனத்தை
சிணுக்கி மீண்டும்
முடக்கும்!

மலைகளின் பரப்பை
விளைத்திடும் தேயிலை
எடைகளினால்
அளந்தபடி நகரும்
இடம்பெயர் பரம்பரையின்
ஒன்றறை நூற்றாண்டு
பாதையில்
கவிதை வரிகள்
இறந்தன!
கண்ணீர்த் துளிகள்
சிவந்தன!

உயிர்க்கும் நாட்களும்
மரிக்கும் நாட்களும்
ஒன்றே என்பதாகி
தலைகீழ் மலையாய்
தவித்தபடி
துடிக்கும்
முக்கோண இதயம்.

சுபமங்களா
இலங்கைச் சிறப்பிதழ்
மே 1994

## மௌனத்துக்கு வயது 160

நான்கிற்கும் அதிகமான தலைமுறைகள்
மூச்சடக்கி இருந்திட - உன்
மௌனததுக்கு வயது 160
எழு - விழு - அழு என்பதே
தொடரும் தாரகமாய்
உன் மௌனத்துக்கு வயது 160
உன்மௌனம் சம்மதமே தான்
என சாதித்துக் கொண்டு
நாற்காலிகளை ஆக்கிரமித்து
வாயுள்ள சில வயிறுகள்
உன் மௌனத்தை ஒலிப்பெருக்கின!
உலகமெல்லாம் மொழியெர்ந்தன!
இப்போ, நிரப்பியது போதுமென
மௌனிக்கத் தொடங்கி விட்டன!

எவரெவரோ சாட்டை எடுத்து
சவடால் செய்திருக்க
பகலை ஜாமமாக்கி
மறைவிடங்கூட நாடாமல்
காமம் கழித்திருக்க
அகலமாய் உன் மௌனம்
துணைபோகின்றது - அங்கு
உன் சாராய சப்தம் - உன்
மௌனத்தை ஆழமாக்குகின்றது.

யுகமாய் உயிர்த்திருக்கும்
இந்த மௌனத்தைக்கொல்லும்
ஓசைச்சூட்சுமங்கள் -
வடக்கு தெற்கு பார்த்து
மயான அமைதியை மனங்கொண்டு
குறட்டை யொலிக்காமலே
குப்புறப்படுத்துறங்கும்.

ஒருநாள் - உன் மௌனபாரம்
பொறுக்காது மலைக்காற்று
பூப்பெய்தும்! - அன்று
மரங்கள் வீழும்.! மதகுகள்
உடையும், மலைகளும் தகர்ந்துபோம்
என எண்ணும் என் மனமும்
யுகாந்தரமாய் நீடித்த
இந்த மௌனத்துக்கு
அர்த்தம் அம்மட்டோ? - எனக்
கேட்டு மௌனமளிக்கும்.

கொழுந்து
ஜுலை, ஆகஸ்ட் - 1989

இரவில் உறைந்து
விடியலில் உதிர்க்கும்
தேயிலைச் செடியின்
மீது
கோதிய பார்வையில்
ஒரு தரிப்பு!

இரத்த சிவப்பில்
அகன்ற இலையில்
நடுவில் ஒரு புள்ளி!

காரணம் நாடி
மனதோ குழையாது
கடிவாளம் கழற்றி
நெடுவழி போன
திசையில் விரிந்த
சிந்தனை!

இந்தப் புள்ளி
இன்னும் வியாபிக்கும்!
இலைகள் யாவிலும்
கிளைகள் தோறும்
வேர் வரை
வியாபிக்கும் -
பின்னர்
கரங்களாய் நீளும்
கிளைகள்
கால்களாய் ஊன்றும்
வேர்கள்
நிமிர்ந்த ஒரு கொழுந்து
தலையென உயிர்க்கும்

அப்போ இதன்
சூட்சுமம் புரியாது
வாக்குரிமைக்கு
பதிந்து கொண்டாயா
என
அதன் காதருகே
கூவிப்போவான்
ஒருவன்

கொழுந்து
செப். அக் 1996

காலியான கூடையை சுமந்து
விடியலின் மௌனத்தைக்
கழித்துப் போகும் உன்
பாதையெங்கும் - நேற்றுக்
கூடைக்குள் எஞ்சிய
தளிர்களால்
நாசிக் குருவியை
உயிர்க்கும் ரகசியம்
புதையும் காற்றுக்குள்!

உச்சிக் கிரணங்களை
உரசி உரசி
எத்தனைக் காலங்கள்
பச்சை மலையம்மா
தலைக்கு பேன் பார்த்தபடி
நிளும்....!

கருப்பந்தைல மரங்களின்
கரங்களால் விரிந்த
நிழலுள் துயிலும்
தேயிலைச் செடிகள் -
மழையின் பாரம் தாங்காது
துளித்துளியாய்
அழுதுவடியும் - நீயோ
மனசு மட்டும்
நனைஞ்சு போவாமல்
உயிர்த்திருக்கும்
நாட்கள் யாவிலும்
மலைச்சரிவுகள் தோறும்
கவிதைகள்
எழுதி எழுதியிருக்க

அதை
சுருக்கிக் கொண்டிருக்கும் -
தேசம் உனதாச்சு
எனச் சொல்லியபடி!

பெண்ணின் குரல்
நவம்பர் 1996

## தோட்டத்து துயில் பொழுது!

மூலை லயத்து ஒத்தைக் கடை
'பெற்றோ மெக்ஸி'ல்
திறந்து விடப்பட்ட
காற்று - உஸ்ஸென
இருள் திரையெங்கும்
கறுப்பைத் தூவும்!

சுருட்டு சுவைத்தபடி
மலையாண்டிக் கிழவன்
முதுகு சொறியும்
'பரக்' 'பரக்' சப்தமும்
அழகம்மாக் கிழவியின்
'டொக்' 'டொக்' எனும்
வெற்றிலை உரல் சப்தமும்
அந்தகாரத்தின் மௌனத்தை
ஆழமாக்கும்!

'கிளப்' சென்று மீளும்
பெரியத்துரை காரின்
'ஹொார்ன்' சப்தமும்
பயங்கர இரவினை
குரூரமாய் சலனப்படுத்தும்!

இராத்திரி தேயிலை
அரைக்க உர்ர்ரென.....
தொடங்கி தொடரும்
ஸ்டோர் இயந்திரத்தின்
தாலாட்டில் - 'இந்த'
இயந்திர சவங்கள்
விடியு மட்டும்
தற்காலிக மாய்
இறந்து போகும்!

குன்றின்குரல்
மார்ச் 1987

தீவகத்து ஊமைகள்
வாய் திறக்கும்
போதெல்லாம்
தோட்டங்களின்
ஊர்வலங்கள்
வாய்ப்பெடுப்பதால்
வரலாற்றின் வார்த்தைக்குள்
எத்தனை எத்தனை
வாலிபங்களின் சமாதிகள்

வெற்றிக் கொடி
வேர்கொள்ளும் போதெல்லாம்
கங்காணித்தனங்களும்
கருங்காலித்தனங்களும்
கல்லறைக்கே
கப்பங்கள் கட்டுவது
கதைகளல்ல
160 வருட வாழ்வின்
கறைகள்!
தேயிலைத் தீபங்கள்
சலுகையை விடுத்து
சல்வைக்குப் போனதில்
சரித்திர பக்கங்கள்
தோறும்
விழுப்புண்களில்
வியாபகங்கள்!

★

1940 முல்லோயாவில்
கோவிந்தன்
செத்துப் போனான்
...................................!

பதினாறு சத சம்பளத்துக்கு
பர்வதங்கள்
பாதங்கள்
பாதைக்கு வந்த போது
பொருளாதாரம்
புரியாத பொலிஸார்
பதில் சொல்லி
வந்தார்கள் -
கோவிந்தன்
செத்துப் போனான்!

அன்று
இந்த பராரிகளுக்கு
எதிராக தூக்கப்பட்ட
துப்பாக்கிகள்
இன்றும் கீழே
வைக்கப்படவில்லை!

★

வெள்ளை யரசாங்கத்தின்
கால் சுற்றியிருந்த
பச்சை பாம்பு
எட்டியாந்தோட்டை
உருளவள்ளியில்
சீறிப் பார்த்தது
.......ஸ் .......ஸ்
அங்கே 363
ரோமங்களுக்கும்
முதுகெலும்பு
முளைத்தது.
பட்டினியினிலும்
பத்தினியாயிருந்தன.

நம் நிழல்கட்டும்
இங்கே

நிலங் கேட்கும்
உரிமையுண்டென
நிமிர்ந்தவர்களை
வழக்கெடுத்துப் பார்த்தும்
தனக்குத் தானே
கீறிக் கொண்டது
அரசாங்கம்!

இந்த கீறலும்
அந்தவன்ம யானையின்
மனசுக்குள்ளிருந்து
அரசுக்கு வந்ததும்
எச்சில்
சுதந்திர சோபையில்
பால் மாடுகளுக்கு
பல் பிடுங்க - ஒரு
காரணமானது
ஆமாம்
பண்பற்ற தேசத்துள்
நல்லவர்கள்
பிரஜைகளாக
இருக்க கூடாதென்ற
பெருமனதோடு
பிய்த்தெடுத்துக்
கொண்டார்கள்
அன்றிலிருந்து
பிரஜைகளாய்
தேசவீதியில் முடங்காது
தொழிலாளர்களாக
உலகவெளியில்
விரிந்தனர் -
வேர்வைப் பூத்த
தீக் கொழுந்துகளாய்.....

★

இன்று
திரும்பிய திசைகளெல்லாம்
வர்ண வர்ண
தொழிற்சங்க சுவர்களில்
முட்டிக் கொள்கின்றோமே -
அதற்கு
அஸ்திவாரம் தோண்டி
அமிழ்ந்துப் போன
ஜீவ வைரங்கள்
எத்தனைத் தெரியுமா?

நடசேய்யர் எனும்
வீரவியூகம்
விதைத்த விதையை
விருட்சமாக்க
வேரறுந்து போன
நாதங்களைப் பற்றி
வயிற்றுப்பிழைப்பு
வாதிகளுக்கு
தெரிந்திருக்கவே
தேவையில்லதான்.

★

1953
குப்பிவிளக்கொளியில்
தேயிலைக் பதர்களில்
பனிப்புணர் இருளில்
அதிகார இருளுக்கு
அன்னியமாய்
மீறிய கோட்டையில்
வீர்ய வெளிச்சங்கள்
சங்கத்துக்கு
மினிட் எழுதிக்
கொண்டிருந்தார்கள்.

சங்கத்துள் நுழைந்து
கொண்டாலும்
சங்கத்தைத் தோட்டத்துள்
நுழைப்பதற்கு
சங்கடப்பட்ட
காலத்திலே தான்
இப்படி சாமிமலைச் சாரல்
மிறிய கோட்டையில்
நிர்வகத்துக்கெதிரான
வேப்பங்காய் தூறல்கள்

கசந்துப் போன
அதிகாரத்துக்கு ஒரு
திசையும் தெரியாமல்
தலைவன் முத்துலிங்கத்தை
அவன் ஆடு
தேயிலைத் தின்றதென்று
குள்ளநரித் தனத்தோடு
வேலை நீக்கியது
முத்துலிங்கத்தின்
மூளையா ஆட்டுக்குள்
இருந்தது எனக்கேட்டு
திரண்டவர்களைக் கண்டு
திடுக்கிட்ட நிர்வாகம்
தூக்கிய துப்பாக்கியில்
வெள்ளையன் எனும்
வீரன்
சிவனொலிபாதமலை
அடிவாரத்திலே
சிவப்பானாகி வீழ்ந்து
இறந்து போனான்!

★

இப்படித்தான்
நச்சரிப்புகளாலன்றி

பல எச்சரிப்புகளால்
நிர்வாக நந்தி
நகர்த்தப்பட்டு
தொழிற்ச் சங்கத்துக்கு
பாதை திறக்கப்பட்டது.

★

தொழிற் சங்கங்கள்
புகுந்ததும்
துயர்மூச்சு போனதா?
சில சமயங்களில் இவைகள் -
துரைசங்கங்களாகும்!
அப்போது
மறுசங்கம் போடவும்
முதலாளிமார் சங்கம்
மரண தட்சனை
கேட்டிருக்கின்றது.

அக்கரப்பத்தனை
டயகமவில் புதுச்சங்கம்
அங்கீகரிக்கப்பட்ட
வேண்டுமென்பதற்காக
பாஷை மாறினாலும்.
பாட்டாளியே நாமேன
பொலிஸ் குண்டுபட்டு
இரத்த சாசனமெழுதி
இறந்து போனான்
ஏப்ரகாம் சிங்கோ என்ற
சிங்களத் தொழிலாளி!
சங்கத்துக்கான
சாவுகள் தொடர்ந்தன!

நல்லத்தண்ணியில்
சங்கம் ஒன்று
வயிறு நிறைத்து

நிர்வாக யந்திரத்துக்கு
எண்ணெய் பூசுவது
கண்டு
எதிர்ச் சங்கம் போட்ட
கருமலையெனும்
ஜீவன் - குழப்பக்காரனென
அழுத்தமாய் முத்திரை
குத்தப்பட்டு
பெருமலைகளிடையே
இரையாக்கிப் போனது!

உடப் புசெல்லாவையில்
சங்க 'ஆபிஸ்' போட
முதலாளிமார் முதுகெலும்பு
விலகாத
சேதி விசாரிக்கப் போன
அனிக் தோட்டத்தவர்களை
துப்பாக்கிகள்
விசாரித்தபேது
கொம்பாடி - பொன்னையா
எனுமிரு விலாசங்கள்
வெளியேறிப் போயின.

சங்க சாவுகளுக்கிடையே
கண்டு - பொங்கி
புரட்சி சங்கமைத்து
சங்க நாதம் செய்த
டெவன் வைத்தியலிங்கத்தை
நள்ளிரவில்
நயவஞ்சகப் பாம்புகளை

ஏவி - நரித்தனமாய்
கொன்று போட்டது.

நாவலப்பிட்டி
லெட்சுமி தோட்டத்தில்
ஹெலி எனும் பெருச்சாளி
துரைக்கெதிராக
சங்கக் கதவுகளை
திறந்த போது
நுழைந்த காடையரும்
பொலிஸும்
ஆராயி நடேசன்
செல்லையா மாரியப்பன்
ஆகியோரை
காணாமலாக்கியது.

தலையாட்டும் சங்கத்தை
தம் சங்கமாய்
தத்தெடுத்து - தொழிலாளர்
நலன் பேணும்
சங்கத்துக்கு
உலை வைத்ததற்கு
எதிராக
கந்தேநுவரவில்
கொடி தூக்கிய
அழகனையும் - ரெங்கசாமியையும்
குண்டுகளோடு குண்டர்கள்
அணைத்தது.

மடுல்கலை கிளாபோக்கில்
சோனை எனும் இளைஞனை
நாயால் வந்த
சர்ச்சைக்கு
நாயிலும் கேவலமாய்
சுட்டது -
இப்படி இப்படி

நீண்டு போகும்
பட்டியல்களின் பெயர்கள்
எழுதப்பட்டது
இரத்தத்தால்.......

சங்கம்
எமது உயிரில்
ஓர் அங்கமென்பதற்காக
அர்பணிக்கப்பட்ட
உயிர்களுக்கு
எங்கே பதில்கள்?

★

கர்ப்பிணிப் பெண்
துடித்தபோது
முளையும் வெளியே
வந்தாலும்
வரமாட்டேன்
என்றது
நிர்வாக வாகனம்!
வெதும்பிப் போன
கீனாக் கொல்லை
தொழிலாளர்கள்
திரண்டனர் - அப்போ
நீட்டப்பட்ட
துப்பாக்கி முனைகளில்
வீராவேசங் கொண்டு
நெஞ்சு மோதி
இறந்து போனார்கள்-
அழகர் - இராமசாமி
எனுமிரு
தியாகத் தீரங்கள்

★

சங்களுக்காக
செத்தது போதும் - இனி

எங்களுகாய்
சாவோமென எழுதப்பட்ட

முதல் அத்தியாயம்
சிவனு லெட்சுமணன்

தேர்தல் தேரோட்டத்துக்கு
நாம் வதியும்
ஏழாயிரம் ஏக்கரா
பாதையாக வேண்டுமென
பதறினான் - இந்தப்
பாதகத்துக்கு
கொடுக்கும் இடம்
நாளை
நம் கோவணத்திலும் கொடியவர்களின்
குடியிருப்புக்கு
குடைப்பிடிக்குமென
அன்றே
உணர்ந்தவன் மலையக மக்களின்
மனவெளிகள் தோறும்
நிறைந்து - அந்த
டெவன் நீரவீழ்ச்சியில்
வீரச்சாவின் வெடியோசை
இன்றும் எதிரொலிக்க
இறந்து போன
லெட்சுமணன்
எழுபதேழின் விடிவெள்ளி
சாகும் போது
அவன் காற்றுக்கு
சொன்ன சங்கதி
“தனியொருவனால்
இவ்வளவு சாதிக்க
முடியுமென்றால்

உங்கள் அனைவராலும்
..........................................."

என்பது தான்
இவனை தேர்தல்
திருவிழாவின் போது
துண்டு துன்டாக்கி

தோளில் சுமந்து
கூவிக் கூவி
தோட்டம் தோட்டமாய்
விற்றவர்கள்
வாங்கி தின்று
வாக்களித்த பாவத்துக்கு
தண்டணை இன்னும்
முடியவில்லை.

★

வெற்றிமேல் வெற்றி
குவித்த
சென் கூம்ஸ் தோட்ட
தலைவன்?
எங்கே? எங்கே?
மண்ணோடு மண்ணான
இல்லை - இயந்திர
மரியாதைகளோடு
இஸ்டொர் அடுப்புக்குள்
கைக்கூலிகளால்
பஸ்பமாகிவிட்டனா?
விடைக்கேட்கப் போய்
அவசரகால அடக்கு முறைகள்
அர்பணமாகி
அண்மை காலத்தில்
விடைப்பெற்றவர்கள்
வரைக்கும் - இது
தொடர்ந்திருக்கின்றது.

இனித்
தொடருமா?

இலங்கையின் இதயங்களை
துப்பாக்கி முனைகளால்
தொட்டுப் பார்த்தால்
அச்சாணிகளாக
இருப்பதா -?

ஆணிகளாக
இருப்பதா - என்பதை
ஞானிகளுக்கு
சொல்லிக் கொடுக்கத்
தேவையில்லை!

ஆனால்
தொழிற்சங்கங்களே
விடியலுக்கு
ஆசைப்பட்டு
வடக்கே விலாசம் மாறிப்
போய்விட்டதுகளுக்கு
ஒரு கணம்
விசனப்பட்டு விட்டு
உங்கள்
சந்தா பந்தாக்களுக்கு
கீழே
எத்தனை
இரத்தப் பக்கங்கள்
புரப்பட்டுள்ளன
என்பதைபாருங்கள்

நீங்கள் வாழ்வதற்காக
இவர்கள்
செத்துப் போனார்கள்

தியாகத்துக்காகவே
அடசரங்கற்றுக் கொடுத்த
இவர்களை
கொண்டு - இனி
மாவட்ட சபை
போர்வையில்
மண்கட்டிகளை
பொன்குட்டிகளாக்கும்
இரசவாத்துக்குப்
பலியாக்காதீர்கள்.

இத்தனைப்
பிணங்களின் மீது
மேலே மேலே
ஏறிய பின்னர்
மாநகரங்களை
மட்டுமே பார்பதுவும்
இனி
வேண்டாம்
வேண்டாம்

வயிற்றுவலியால்
இறந்தவர்களுக்கு
வானுயர சிலையமைத்து
ஆளுயுர மாலைபோடுவதை
நிறுத்துங்கள் -
பொறுப்புணர்வோடு
இந்த
இரத்த சகாப்தத்துள்
பூத்திருக்கும்
புனிதப் புதை குழிகளுக்கும்
கொஞ்சம்
பூத்தூவுங்கள்

அங்கே
புதைந்திருப்பது
மரணங்கள்
மட்டுமல்ல - உங்கள்
மனச்சாட்சிகளும்
தான்.

கொழுந்து
மே - 1990

(குறிப்பு : "புனிதப்புதை குழிகள்" என்ற தலைப்பில்
பிரசுரிக்கப்பட்டது.)

# தீவகத்து ஊமைகள்

*(கவிதைகள்)*

© சு. முரளிதரன்

முதற் பதிப்பு : டிசெம்பர் 2001

வெளியீடு எண் : 20

அட்டை அமைப்பு : எஸ்.டி.சாமி

வெளியீட்டாளர் : அந்தனி ஜீவா
மலையக வெளியீட்டகம்
த. பெ. இல. 32
கண்டி

THEEVAGATHU UMMAIGAL

Poems By S. Murlidharan ©

First Edititon : December 2001

Published by : Anthony Jeeva
Hill Country Publishing House
P.o. Box 32 Kandy, Sri Lanka

Price : Rs. 55/-

Printed by : Print - Ex
Kandy.
Tel. 074 - 477303

**ISBN. 955 - 9084 - 12 - 7**

## மலையக வெளியீட்டகத்தின் வெளியீடுகள்

01. சி.வி.சில சிந்தனைகள்
 - சாரல் நாடன்
02. தியாக யந்திரங்கள்
 - சு. முரளிதரன்
03. குறிஞ்சி தென்னவன் கவிதைகள்
 - குறிஞ்சி தென்னவன்
04. யௌவனம்
 - தேவதாசன் ஜெயசிங்
05. கூடைக்குள் தேசம்
 - சு. முரளிதரன்
06. தேசபக்தன் கோ. நடேசய்யர்
 - (இலங்கை சாகித்திய மண்டல பரிசு பெற்றது)
07. ஓவியம்
 - சி. எ. எலியாசன்
08. லாவண்யம்
 - தேவதாசன் ஜெயசிங்
09. மேகமலைகளின் ராகங்கள்
 - மொழிவரதன்
10. காந்தி நடேசய்யர்
 - அந்தனி ஜீவா
11. லயத்துச் சிறைகள்
 - தி ஞானசேகரன்
12. The Hill Country in Sri Lankan Tamil Literature
 - Anthony Jeeva
13. மலையகமும் இலக்கியமும்
 - அந்தனி ஜீவா
14. காற்றின் மௌனம்
 - பண்ணாமத்து கவிராயர்
15. கவ்வாத்து
 - தி. ஞானசேகரன்
16. பத்திரிகையாளர் நடேசய்யர்
 - சாரல்நாதடன்
17. குறிஞ்சி மலர்கள்
 (மலையக பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகள்)
18. சாந்தா ராஜின் சிறுகதைகள்
 - சாந்தாராஜ்
19. மாவலியே மாநதியே
 - மலரன்பன்
20. தீவகத்து ஊமைகள்
 - சு. முரளிதரன்

ISBN. 955 - 9084 - **12 - 7**

Print-Ex. Kandy, 074 477303